வெளிநாட்டு பிரயாணம்
திறமையான சேவைக்கும்,
நம்பிக்கைக்கும்,
செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
Tele: 24791, 24886

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ரெலிபோன்
ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe vehicle parking
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
Tele: 24791, 24886

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ வைகாசி மீ 22 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரம்ழான் பிறை 26 (05 06 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY கதிர்: 170

# போராளிகள் – படைகள் கிளிநொச்சி நகரில் உக்கிரச் சண்டை!

## படை முகாம் முற்றுகை; நேற்று பி.ப 5 மணி முதல் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 5

கிளிநொச்சி நகரில் நேற்றுக்காலை சுமார் நான்கரைமணி நேரம் போராளிகளும் ஆயுதப்படையினரும் கடும்சண்டையில் ஈடுபட்டனர்.

நாள்முழுவதும் (சிறிய இடைவெளியின் பின்னர்) இருதரப்பாரும் மோதியதாக இங்கு கிடைக்கும் தகவல்கள் மூலம் அறியவந்தது.

கிளிநொச்சி நகரத்தில் உள்ள கூட்டுப்படை முகாமை நோக்கிப் போராளிகள் கடுமையாகத் தாக்கினர்கள்.

அந்த முகாம் அனேகமாக முற்றுகையிடப்பட்டது போன்ற நிலையில், துருப்புகள் வெளியேறமுடியாத வகையில் போராளிகள் நாலாபக்கங்களில் இருந்தும் தாக்குதல் நடத்தினர் என்று கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன

படையினர் விமானத்தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் அதனால் ஆறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாமெனவும் 25க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் அறியவந்தது.

கிளிநொச்சிமுகாம் தாக்கப்படுவதாக அறிந்து ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவத்தினர் அங்குபோக முயன்றபோதிலும் கிளிநொச்சியை அண்மிக்க அவர்களால் முடியாமற்போனதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

சண்டையைத் தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் 5 மணி தொடக்கம் இன்று காலை 7 மணிவரை கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 5.30 மணிக்கு ஆரம்பமான போராளிகளின் தாக்குதல் பகல் 10 மணிவரை சுமார் நான்கரை மணித்தியால நேரம் நீடித்தது.

நேற்றுக் காலையில் இராணுவ, பொலீஸ் கூட்டு முகாமைச் சுற்றிவளைத்த பெருந்தொகையான போராளிகள் திடீரென தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர் என்று அறிய வந்தது.

இதனையடுத்து இருதரப்பிலும் மோதல் உக்கிரமாக நடைபெற்றது. நவீனரக ஆயுதங்களும், ஷெல் குண்டுகளும் மிகத் தாராளமாகப் பாவிக்கப்பட்டன.

வானத் தாக்குதலும் அடுத்தடுத்து நிகழ்ந்தது.

இந்த மோதல்களுக்கு நடுவில் அகப்பட்டு ஆறுக்கும் அதிகமான பொது

(4ஆம் பக்கம் பார்க்க)

### யாழ் அரச அதிபரும் இடை வழியில்

யாழ்ப்பாணம், ஜூன் 5

கிளிநொச்சியில் நடந்த அசம்பாவிதங்கள் காரணமாக கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பஸ்மீது கல் வீச்சு! தாக்குதல்!!

கொழும்பு, ஜூன் 5

கொழும்பில் இருந்து நேற்று இரவு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ்கள் காடையர்களின் தாக்குதலுக்கு இலக்காகின.

வெள்ளவத்தை ருத்ரா மாவத்தையில் இருந்து பயணிகளுடன் யாழ்ப்பாணத்துக்கு பஸ் ஒன்று புறப்படவிருந்தது.

அச்சமயத்தில் அங்கு வந்த காடையர்கோஷ்டி ஒன்று பஸ்மீது மண்ணெண்ணெயை ஊற்றி நெருப்பு வைத்தது.

பயணிகள் இறங்கி தீயை அணைத்தனர்.

வேறு இரண்டு தனியார் பஸ்கள் பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருக்கையில் வத்தளை — பேலியகொடைக்கு அருகில் வைத்து கல்வீச்சுக்கு இலக்காகின. பஸ்களின் கண்ணாடிகள்சேதமடைந்தன. ஒரு ஆண் பயணி காயமடைந்தார். (உ-எ-2)

### பஸ் எரிந்தது

கொழும்பு, ஜூன் 5

கொழும்பு தேர்ஸ்டன் வீதியில் நேற்றுக் காலை திடீரென்று இ. போ. ச. பஸ் ஒன்று தீப்பற்றி எரிந்தது.

பஸ்ஸின் டீஸல்தாங்கி வெடித்ததினால்தான் பஸ் தீப்பற்றியது.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது

பஸ்ஸின் பெரும்பகுதி சேதமானது. (உ-எ-2)

## போராளிகளுக்கு கருணாநிதியின் பிறந்தநாள் பரிசு!

சென்னை, ஜூன் 4

திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தனது 63 ஆவது பிறந்தநாள் பரிசாக ஐந்து தமிழ்ப் போராளி அமைப்புக்களுக்கு தலா ஐம்பதினாயிரம் ரூபா நிதி உதவி அளித்தார்

தமிழீழ விடுதலை புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.), ஈழப் புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகிய ஐந்து அமைப்புக்களே இந்நிதி உதவியைப் பெற்றன.

அண்மையில் மரணமான தமிழ் ஈழவிடுதலை இயக்கத் தலைவர் சுந்தரம் ஸ்ரீ சபாரத்தினத்தின் குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபாநிதி அளிப்பதாகவும் கலைஞர் கருணாநிதி அறிவித்தார்.

தனது பிறந்தநாளை தமிழ் ஈழப்போராட்டத்துக்கு நிதி சேகரிக்கும் நாளாக கலைஞர் அனுஷ்டித்தார். சுமார் 3 லட்சம் ரூபா 'தமிழ் ஈழ நிதியாக சேகரிக்கப்பட்டது' (உ-எ.

### குண்டுப் புரளி தொடர்கிறது

கொழும்பு, ஜூன் 5

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித் திணைக்களம் நேற்றுக் குண்டுப் புரளியால் அல்லோலகல்லோலப்பட்டது. (உ)

# பேச்சுக்கள் நடத்த ஒன்றுபட்ட தமிழர் குழு ஒன்றை உருவாக்குங்கள்

## ராஜீவிடம் ஜே. ஆர். கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 4

சிதம்பரம் குழு மூலம் அனுப்பி வைக்கப்பட்ட பிந்திய யோசனைகள் பற்றி பேச்சு நடத்துவதற்காக ஒன்றுபட்ட தமிழ் குழு ஒன்றை உருவாக்குங்கள்

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பியிருக்கும் நீண்ட கடிதத்தில் இப்படிக் கோரியிருக்கிறார்.

பேச்சுக்கள் நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கவும் —

பேச்சுக்கள் நடத்தும் சமயத்தில் அமைதியைப் பேணவும் —

வழி செய்யும் விதத்தில் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துங்கள்.

— ஜனாதிபதியின் கடிதத்தில் இடம்பெற்றிருக்கும் மற்றொரு முக்கிய அம்சம் இது எனத்தெரிய வருகிறது.

திரு. ஜெயவர்த்தனவின் நீண்ட கடிதம் இர

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டை முகாம் மின்சாரம் துண்டிப்பு

### திருத்தச்சென்ற ஊழியரும் திருப்பி அனுப்ப பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாணம் கோட்டைக்குச் செல்லும் சக்திவாய்ந்த மின்சாரத் தொடர்புகள் கடந்த இரண்டு நாட்களாக துண்டிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக கோட்டை பாதுகாப்பு அதிகாரி ஒருவர் யாழ். மாநகரசபையுடன் தொடர்பு கொண்டார்

இதனை அடுத்து திருத்த வேலைகள் செய்வதற்காக மின் ஊழியர்கள் கோட்டைக்குச் சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத கோஷ்டி ஒன்று இவர்களை மறித்து திருப்பி அனுப்பியதாகத் தெரியவருகிறது

இதனால் அவர்கள் கோட்டைக்கு செல்லாமல் திரும்பிச் சென்றனர்.

முகாமிலுள்ள ஜெனரேட்டர் மூலம் கோட்டைக்குள் ஒரு சில முக்கிய பகுதிகளுக்கு தற்போது மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. (இ-10)



எல்லாம் நன்மைக்கே எண்டு எடுக்கிறவையும் இருக்கினம். அந்த வகையிலை ஷெல் குண்டுத் துண்டுகளும் ஒரு விதத்திலை நன்மை செய்யுதோ பின்னை...!

## வயாவிளானில் 6 சிலிண்டர் குண்டுகள் சிப்பாய்களால் மீட்பு

### தொடர்பு வயர் துண்டிப்பு

பலாலி, ஜூன் 5

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாமுக்கு அண்மையில் சிப்பாய்களுக்கு குறி வைத்து வைக்கப்பட்டிருந்த 6 சிலிண்டர் குண்டுகள் நேற்று சிப்பாய்களால் கைப்பற்றப்பட்டன.

சிப்பாய்கள் அவ்விடத்திற்கு வந்தபோது சிலிண்டர்களை வெடிக்க வைக்க முயற்சி எடுக்கப்பட்டதாகவும், அவை வெடியாதபோது வயர் துண்டிக்கப்பட்டிருந்தது கண்டு பிடித்ததாகவும் தெரிகின்றது.

சிலிண்டர் குண்டுகளுக்கான தொடர்பு வயர் சிலரால் துண்டிக்கப்பட்டதுடன் இராணுவத்துக்கும் இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இத்தொடர்பு வயர் துண்டிப்புச் சம்பந்தமாக குறிப்பிட்ட இயக்கத்தால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனராம். இன்னொருவர் தலைமறைவாகியுள்ளாரென்றும் கூறப்படுகின்றது.

சிலிண்டர் குண்டுகள் வெடித்திருப்பின் சிப்பாய் தரப்பில்பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கலாமெ மென நம்பப்படுகிறது. (இ-119)

# திருமலையில் இனமோதல்

## மாறிமாறித் தாக்குதல் சம்பவம்

திருகோணமலை, ஜூன் 5

திருகோணமலை நகருக்கு அருகில் உள்ள ஆண்டாங்குளம், 4ஆம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை நடந்த அசம்பாவித சம்பவங்களில் பலர் காயமடைந்தும் சிலர் இறந்தும்இருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

நேற்று மாலை ஆண்டாங்குளம் பகுதியில்துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டன.

கன்னியா நடேசர் கோயில் முன்னால் இருந்து ஆண்டாங்குளத்துக்கு வரும் வீதிப் பக்கமாகத்தான் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டனவாம்.

அதைத் தொடர்ந்து தான் அப்பகுதியில் வசித்துவந்தபெரும்பான்மை இனமக்கள் பாதுகாப்புத் தேடி ஓடத் தொடங்கினர். பின்னர் ஊர்காவல் படையினரும் சுடத் தொடங்கினராம்.

திருமலை நகரில் இருந்து துருப்புக்கள் அந்த இடத்துக்கு விரைந்து சென்றனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, 4ஆம் கட்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

5 — 6 — 1986
வியாழக்கிழமை

சுபநேரம்:
7 22 முதல் 8 52 வரை
ராகுகாலம்:
1.22 முதல் 2.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்

| நோன்பு நேரம் | |
| --- | --- |
| சஹார் | 4·18 |
| மக்ரிப் | 6·24 |

# வயாவிளான் - பலாலியில் ஹெலிக்கொப்டர் சூடு!

## இரு சகோதரர் காயம்

பலாலி, ஜூன் 5

நேற்றுக் காலை 8 30 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை வயாவிளான் பலாலி இராணுவ முகாமை அண்டிய பகுதிகளை நோக்கி விட்டு விட்டு மூன்று தடவைகள் ஹெலிக்கொப்டர் சுட்டது.

காலை 8.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஹெலிக்கொப்டர் தாக்குதலில் அச்சுவேலி செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த திருமதி மகேந்திரம் அற்புதராணி (37வயது) என்பவர் படுகாயமடைந்தார்.

வலது தோள் மூட்டில் காயமடைந்த அவர் அச்சுவேலி தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருடன் கதைத்துக் கொண்டு நின்ற அவரது இளைய சகோதரனை திரு ஏ யேசுராசா (வயது 20) என்பவருக்கும் முகத்தில் காயம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் சிதறல்களுக்கு ஏற்பட்டுவரும் கிராக்கி!

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ் கோட்டை முகாமில் இருந்து மேற்கொள்ளப்படும் "ஷெல்" தாக்குதலின்போது வெடித்துச் சிதறும் பித்தளைத் துண்டுகளுக்கும் துப்பாக்கி வெற்று ரவைகளுக்கும் யாழ்நகரில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இவற்றைச் சேகரிக்கும் சிலர் யாழ்நகரில் இவற்றை நல்ல விலைக்கு விற்கின்றனராம்.

"ஷெல்" சிதறல் துண்டுகளையும் வெற்று துப்பாக்கி ரவைகளையும் கிலோ பத்து ரூபா முதல் பதினைந்து ரூபா வரை தனியார் வியாபாரிகள் கொள்முதல் செய்வதைக் காண முடிகிறது

இந்த உலோகப் பொருள்களை உருக்கி வேறு தேவைகளுக்கு வியாபாரிகள் பயன்படுத்துவதால் இவற்றிற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. (இ-10)

## நகரில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழ் மக்களுக்கு எதிராக அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை எதிர்த்து இன்று யாழ் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறுகிறது.

இந்தப் பேரணியை தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்கான இணைப்புக்குழு ஒழுங்கு செய்துள்ளது.

இன்று காலை 8 மணி அளவில் யாழ் நாச்சிமார் கோயிலடியில் இருந்து ஆரம்பமாகும் பேரணி

4 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் தற்கொலை படையாம்!

கொழும்பு, ஜூன் 5

கொழும்பு மாநகரில் தமிழ்த் தீவிரவாதிகளின் தற்கொலைப் படை ஒன்று நடமாடுகின்றது.

இப்படி சுதந்திரக்கட்சியின் சிங்களப் பத்திரிகை 'தினரல' நேற்றைய இதழில் செய்தி பிரசுரித்து இருந்தது.

இந்தத் தற்கொலைப் படை கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மருதானை, மட்டக்குளி பகுதிகளில் இயங்குகின்றது.

இப்படி அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருந்தது. (உ-எ-2)

# சர்வகட்சி மாநாடு: கூட்டணிக்கு அழைப்பு இல்லை

கொழும்பு, ஜூன் 5

அரசாங்கம் கூட்ட உத்தேசித்துள்ள சர்வகட்சி மாநாட்டுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அழைக்கப்படமாட்டாது.

இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மட்டுமே இந்த மாநாட்டுக்கு அழைக்கப்படும் என்று அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்ட முடிவில் செய்தியாளர் மாநாடு நடைபெற்றது.

அவசரகாலச்சட்ட நீடிப்பை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடியதாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இது அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்படப் போகும் 10ஆவது திருத்தம் என்று அறிவிக்கப்பட்டது.

இப்போதுள்ள அரசமைப்புச் ஷரத்துகளின் படி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தான் அவசரகால நீடிப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும். (உ-எ-2)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணக் கடன்

யாழ்ப்பாணம். ஜூன்5 வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு தற்போது கடன் வழங்கப்பட்டு வருகிறது. எழுநூறு பேர்வரை இக் கடனுதவிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

70 லட்சம் ரூபாவை இதற்கென கல்வித் திணைக்களம் ஒதுக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார நஷ்டத்தைப்பொறுத்து அவர்களது இருவருட சம்பளம் கடனாக வழங்கப்படுகிறது.

இதன்மூலம் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட ஆசிரியரும் கிட்டத்தட்ட 25 ஆயிரம் ரூபா பணத்தை உதவியாகப் பெறுகின்றனர்.

(இ—5)

## ...திகாரி தெரிவித்த யோசனை

கொழும்பு, ஜூன் 5 குண்டுப் புரளி என்றால் சம்பந்தப்பட்ட கட்டடத்தை விட்டு வெளியேறுவது தான் ஒரே ஒரு பாதுகாப்பான வழி. இதைத் தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாது

பொது நிர்வாகத் துறை அமைச்சுச் செயலாளர் திரு. டி பி. ஐ எஸ் சிறிவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்ததாக 'அத்த' சிங்கள நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டது.

(உ-எ-2)

## பத்தாயிரம் பாடசாலைகளில் பாதுகாப்புத் திட்டம்

கொழும்பு, ஜூன் 5 நாட்டில் உள்ள பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் இது சம்பந்தமான சுற்றுநிருபங்களை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்து உள்ளார்.

தீவிரவாதத் தாக்குதல்களைச் சமாளிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(உ - எ)

## கம்யூனிஸ பாடல்களை பாடுகிறார் புலமைப்பித்தன்

புலவர் புலமைப்பித் [redacted] அங்கே வசித்து வருபவர்.

இன்று தமிழகத்தின் ஆஸ்தான கவிஞராக அவர் மிளிர்கின்றார்.

புலவர் புலமைப்பித்தன் தமது பாடல்களைப்பற்றி இப்படி சொல்கிறார்:

நான் எழுதும் எல்லாப் பாடல்களுமே எனக்கு முழு மன நிறைவைத் தருகின்றன. டைரக்டர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர் 'ஓகே' செய்தால் போதும் என்று கருதுபவனல்ல நான்.

அவர்களுக்கு நிறைவைத் தந்தாலும் எனக்கு நிறைவைத் தராதபோது பாடல்களை நான் மாற்றியதும் உண்டு.

'நீதிக்குத் தலைவணங்கு' படத்தில் எழுதிய "இந்தப் பச்சைக் கிளிக்கொரு செவ்வந்திப் பூவில் தொட்டிலைக் கட்டி வைத்தேன்" பாடலும் 'உலகம் சுற்றும் வாலிபனில்' எழுதிய "சிரித்து வாழ வேண்டும்" பாடலும் இந்த ரகத்தைச் சேர்ந்தவையே

நான் எழுதிய எல்லாப் பாடல்களையுமே எனக்குப் பிடிக்கும். கம்யூனிஸ, பொதுவுடைமைக் கருத்துக்களில் எனக்கு அழுத்தமான பிடிப்பு உண்டு. அதனால்தான் நான் எழுதும் பாடல்களில் அந்த வாடை அடிக்கும்.

'இதயக்கனி' படத்தில் 'நீங்க நல்லா இருக்கோணும்' பாடலில் "காற்றும் நீரும் வானும் நெருப்பும் பொதுவில் இருக்குது, மனிதன் காலில் பட்ட பூமி மட்டும் பிரிந்து கிடக்குது" என்று எழுதியிருந்தேன்.

பஞ்ச பூதங்களில் காற்றையும் வானத்தையும் நீரையும் (மழை) நெருப்பையும் யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. ஆனால் மனிதன் காலில் பட்ட நிலம் மட்டும் பிரிந்து கிடக்கிறது. இந்தநிலை மாறி பொதுவுடைமை வரவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

'ஓடி ஓடி உழைக்கணும்', 'நாளைய உலகை ஆளவேண்டும்' போன்ற பாடல்களும் கம்யூனிஸ சித்தாந்தப் பாடல்களே.

நான் எப்போதும் செய்வதை, விரும்புவதைத்தான் என் பாடல்களில் வெளிப்படுத்துவேன் என்றார்.

தினசரி சினிமா

## ரங்கநாதன் கொலை: 2 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

திருகோணமலை; ஜூன் 5 சட்டத்தரணி ரங்கநாதன் கொலை சம்பந்தமாக இரண்டு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

சட்டத்தரணிகள் எம். கே. செல்வராசா, இரா. சந்திரபாலன் உட்பட நீதிமன்ற ஊழியர்கள் இரண்டு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டினர்.

பதில் நீதிவான் ஓ எல். எம் இஸ்மாயில் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது.

காலை 11 மணிக்கு ஆரம்பமான அடையாள அணிவகுப்பு மாலை வரை நடந்தது விஜயசிரி, கெலார்ட் ஆகிய சந்தேக நபர்களே அடையாளம் காணப் பட்டனர்.

அடையாளம்காண 14 சாட்சிகள் அழைக்கப்பட்டிருந்தனர். (உ-எ-150)

## நீர்வேலியில் சைக்கிள் அபகரிப்பு

நீர்வேலி, ஜூன் 5 நீர்வேலி சந்திக்கு அருகாமையில் வசிக்கும் ஒருவரது மோட்டார் சைக்கிளைத் துப்பாக்கி சகிதம் வந்த நான்கு இனந்தெரியாத நபர்கள் திருப்பித் தருவதாகக் கூறி அபகரித்துச் சென்றனர்.

## மட்டக்களப்பில் காணமற்போன 350பேர் பற்றிய விவரங்கள் சேகரிப்பு

மட்டக்களப்பு ஜூன்-5 மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு தகவல் பெறமுடியாதவர்கள் தொடர்பான விவரங்களை சேகரிப்பதில் மட்டக்களப்பு இணைப்பதிகாரி திரு டொனல் மென்டிஸ் ஈடுபட்டுள்ளார்

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப்பட்ட சுமார் 350 பேர் தொடர்பான தகவல்களைப் பெறமுடியாதிருப்பதாக பிரஜைகள் குழு தெரிவித்து காணமற்போனோர் பற்றி விபரங்களை இருமாதங்களுக்கு முன்பு சமர்ப்பித்தது

இந்நிலையில் குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலை இம்மாவட்டங்களிலுள்ள பொலீஸ் நிலையங்கள், முகாம்கள், தடுப்பு நிலையங்கள் ஆகிய இடங்களுக்கு இணைப்பு அதிகாரி அனுப்பிவைத்துள்ளார்

இணைப்பு அதிகாரி கிடைத்த தகவல்களை அடுத்த மாத நடுப்பகுதியில் பிரஜைகள் குழுவிற்கு அறிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது,

(ஒ)

## கொழும்பில் தேடுதல்

கொழும்பு, ஜூன் 5 ஜாஎல — சீதுவை பகுதியில், குடெல்ல பகுதியில் பலத்த தேடுதல் நடவடிக்கைகளில் அதிரடிப்படைப் பொலீஸார் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

வாகனங்களைத் தடுத்து பலத்த சோதனை இட்டனர்.

25க்கு மேற்பட்ட அதிரடிப்படை பொலீஸார் 2 கவச வாகனங்கள் சகிதம் சென்று தேடுதலில் ஈடுபட்டனர். (உ-எ-2)

## ரெலோ ஏற்பாட்டில் ஊர்வலம்

எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமையை போராளிகள் தினமாக அனுஷ்டிக்குமாறு தமிழீழ மாணவர் பேரவை (ரெலோ) கேட்டுள்ளது.

## நேற்று குண்டுப் புரளி

செவ்வாயன்று குண்டுப் புரளி கொழும்பு மாநகரைக் கலக்கியது

கோதமி மகாவித்தியாலயம், விசாக வித்தியாலயம், சென் தோமஸ் கல்லூரி, எயர் லங்கா அலுவலகம் ஆகியவை குண்டுப் புரளி காரணமாக சோதனை இடப்பட்டன. (உ-எ-2)

## முதலீட்டாளர்களுக்கு முதல் கூட இல்லை

யாழ்ப்பாணம்,ஜூன் 5 யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கத்தில் வட்டிக்குப் பணம் கொடுத்தவர்களுக்கு 1984 ஆம் ஆண்டுக்குப்பின்னர் எவ்விதமான வட்டியும் வழங்கப்படுவதில்லை.

இவர்கள் வைப்பிலிட்ட முதலைக்கூட மீளப் பெறமுடியாமல் இருக்கின்றது.

இதனால் பாதிப்படைந்தவர்கள் 52, வைமன் வீதி,யாழ்ப்பாணம்என்ற விலாசத்தில் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்து ஆராய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.

சுமார் 300 பேர்வரை ஐக்கிய வியாபாரச் சங்கத்துடன் கணக்குகளை வைத்திருந்ததாகவும் 55 லட்சத்துக்கும் அதிகமான பணம் முதலீடு செய்யப்பட்டிருந்ததாகவும் அறியப்படுகின்றது.

1984 ஆம் ஆண்டு வன்செயல்களினால் யாழ் ஐக்கியவியாபாரச் சங்கக் கட்டிடம் தீக்கிரையாகியது.

அதன் பின்னர் நடந்த 22 கொள்ளைச் சம்பவங்களாலும் அச்சங்கம் நலிவடைந்தது. இதனால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிதான், வாடிக்கையாளர்களுக்கு வட்டியை வழங்க முடியாமல் செய்தது என ஐக்கிய வியாபாரச் சங்க முன்னாள் அலுவலர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

(உ — ஒ)

## வவுனியாவில் இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூன்5 வவுனியாவில் திங்கட்கிழமை ஆறு இளைஞர்களையும் செவ்வாய்க்கிழமை ஒரு இளைஞரையும் ஆயுதப்படையினர் கைது செய்தனர்.

கைதானவர்களின் உறவினர்கள் வவுனியா பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராசசிங்கத்துக்கு இதுசம்பந்தமாக முறையிட்டனர்.

அதைத் தொடர்ந்து டாக்டர் பரராசசிங்கம் ஆயுதப்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்

திங்கள் கைதானவர்களின் பெயர்விவரங்கள் வருமாறு;

1. தம்பு ஞானசேகரம்
2. கமலநாதன் விஜயானந்தன்.
3. ஆதிநாதன் கமலநாதன்.
4. சுப்பிரமணியம் ராஜேந்திரம்
5. தம்பிராசா செல்வராசா
6. தம்பிராசா உதயகுமார்

செவ்வாய்க்கிழமை கைதான இளைஞரின் பெயர் பத்மநாதன் பத்மரஞ்சன். இவர்கமத்தொழில் சேவை நிலையத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றுகிறார்.

(உ - எ)

## கிரனேட்டுகள்

மட்டக்களப்பு, ஜூன் 5 மட்டக்களப்புப் பகுதியில் கறுவப்பன் கேணி, 30 வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களில் ஆயுதப் படையினர் சுற்றிவளைத்துத்தேடுதல் நடத்தினர்.

அச்சமயம் வீடு ஒன்றில் இருந்து கிரனேட்டுக்கள், ஜெலிக்நைற் வெடிமருந்துகள், உணவுப் பொருள்கள் கைப்பற்றப் பட்டன.

(உ -எ 21)

தேவை

பெண்கள் காசாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அண்மையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஸ்ருடியோ நித்யஜோதி, சங்கானை.

## ஜூலையில் விவசாய பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் ஜூன்5 திருநெல்வேலி அரசு விவசாயப்பயிற்சி நிலையத்தில் இவ்வாண்டுக்கான 3 மாத காலப் பொது விவசாயப் பயிற்சி நெறி ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை திருநெல்வேலி விவசாயப்பண்ணை முகாமையாளர் திரு பி. தருமலிங்கம், விவசாயஉத்தியோகத்தர் திரு. ப. இராமநாதன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

மேற்படி பொது விவசாயப் பயிற்சிக்கென 25 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(உ - ஒ)

## எரிபொருள் தேவை: அரசாங்க அதிபரிடம் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்5 வடபகுதிக்கான பெற்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களை உடனடியாக பெற்றுத் தருமாறு யாழ்-மேலதிக அரசாங்க அதிபரிடம் யாழ்- ஆஸ்பத்திரி, வட- பிராந்திய போக்குவரத்துச் சபை ஆகியன நேற்று கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலைகளினால் எரிபொருளை வடபகுதிக்குக் கொண்டு வருவதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் ஆஸ்பத்திரி சேவைகளும் வடபகுதி போக்குவரத்து சேவைகளும் பாதிப்படையும் நிலையை அடைந்திருக்கின்றன.

( உ - 10)

## தற்போதைய நிலைகுறித்து சபை விவாதிக்கும்

கொழும்பு ஜூன் 5 நாட்டின் தற்போதைய நிலைகுறித்து நாடாளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை விவாதிக்கப்படும்.

இதற்கு வழிசெய்யும் பிரேரணை ஒன்றை பிரதமர் திரு. [illegible] ஒத்திவைப்பு [illegible] சபையில் சமர்ப்பிப்பார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநிலம் மாவட்டம் உள்ளூர்

# எமது நூலக இயக்கம் விரிவடைய வேண்டும்

### நேசையா கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன்.5 எமது நூலக இயக்கம் யாழ் மாநகரம் மட்டுமன்றி, யாழ்மாவட்டம், வடகீழ் பிரதேசம் என்று விரிவடைந்து ஒரு சமூக வாக்க செயற்பாடாக மலர வேண்டும்.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டதன் ஞாபகார்த்த தினத்தையொட்டி ஞாயிறு காலை நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற "நூலக இயக்கம்" என்ற கருத்தரங்கில் தலைமையுரை ஆற்றிய முன்னாள் பேராசிரியர் கு. நேசையா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது;-

நூல்களை வாசிக்க வழங்குவது மட்டுமல்லாமல், கலந்துரையாடல்கள் படக்காட்சி, கதை கூறல், சொற் பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை உள்ளடக்கியதே நூலக இயக்கமாக அமைய முடியும்

அங்கவீனர்கள் கூட மூன்று சில்லு வண்டில் மூலம் வாசிகசாலைக்கு உள்ளே வந்து வாசிக்கும் வசதிகளை நாம் செய்து கொடுக்கவேண்டும்.

1700 கிராம நூலகங்களை இணைத்து தேசிய நூலகம் கேரளாவில் செயற்படுகிறது.

இதுவே உலகிலேயே தலைசிறந்த நூலக இயக்கமாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு திரு நேசையா பேசினார்

யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கு பரராஜசிங்கம் உரையாற்றும் பொழுது தெரிவித்ததாவது;-

கல்விக்கு மிகவும் உகந்த சாதனம் நூலக இயக்கங்களாகும். வாசித்தல் என்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த நூலக இயக்கம் முயல வேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி ஆகியவை காரணமாக எமது மக்களிடையே வாசிப்புப் பழக்கம் மந்த நிலையை அடைந்துள்ளது. இந்த நிலை ஏனைய நாடுகளில் இல்லை—என்றார்

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு. வே. பாக்கியநாதன் யாழ் மத்திய கல்லூரி நூலகர் திரு. கா. மாணிக்கவாசகர், ஈவ்லின் இரத்தினம் பல்கலை நிறுவன நூலகர் திரு. என். செல்வராசா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

யாழ் மாநகர பொதுசன வாசிகசாலை நூலகர் திருமதி எஸ். நடராசா நன்றியுரை கூறினார்.

(இ-ஒ-9)

## படகுச்சேவை கட்டணம் குறைப்பு

மண்டைதீவு, ஜூன் 5 மண்டைதீவு - படகுச் சேவைக் கட்டணம் இப்பகுதி பிரயாணிகளின் வேண்டுதலின் பேரில் 5 ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் தற்பொழுது ஒரு பிரயாணிக்கு ஒரு தரம் பிரயாணம் செய்வதற்கு 10 ரூபாவே கட்டணமாக அறவிடப்படுகின்றது

படகுக் கட்டணம் குறைக்கப்பட்டும் மிகக் குறைவாகவே மக்கள் பிரயாணம் செய்வதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

தினசரி மூன்று நான்கு தடவைகள் இப்படகுச் சேவை நடைபெறுகின்றது.

குருநகர் துறைமுகத்திலிருந்து மண்டைதீவுக்கு படகுச் சேவை நடைபெறுகின்றது.

( இ - ஒ 143)

## விசுவலிங்கம் ஐயா மறைவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 5 அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கார்த்திகேசு விசுவலிங்கத்தின் மறைவு குறித்து யாழ் பிரசைகள் குழுவும், நீர்வேலி பிரசைகள் குழுவும் அஞ்சலித் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

யாழ் பிரசைகள் குழுவின் விசேட கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடந்தது. அக்கூட்டத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

திரு. விசுவலிங்கத்தின் மறைவு ஈழத்தமிழ் மக்களுக்கு பெருஞ் சோகம் தரும் சம்பவமாகும்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர்என்ற முறையில் அவர் ஆற்றிய பணி காரணமாக அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்கள் உடனடி நிவாரணம் பெற்றனர்.

அரச உதவி கிடைக்காத வேளையிலும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உதவி காரணமாகவே பல தமிழ் மக்களின் உயிர்கள் காக்கப்பட்டன. அப்படி ஒரு நிலையமை உருவாக்கியவர் திரு விசுவலிங்கம்.

இப்படி அந்த அஞ்சலித் தீர்மானம் கூறுகிறது.

நீர்வேலி பிரசைகள் குழு நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு திரு. விசுவலிங்கம்அவர்கள் தேசிய ரீதியாகவும், சர்வ தேசிய ரீதியாகவும் நிதிதிரட்டி, ஆயிரக்கணக்கான அகதிக்குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதில்பெரும்சேவை யாற்றியுள்ளார்- அத்துடன் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தைத் தலைமை தாங்கி, திறம்பட நெறிப்படுத்தி வந்துள்ளார்.

தமிழ்த் தேசிய இனம் அராஜகவாதிகளால் படுகொலை செய்யப்பட்டு, அழிக்கப்பட்டு வரும் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் திரு, விசுவலிங்கம் என்ற மாமலையின் மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும் - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

(உ-எ)

## இறந்தவர் தொகை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 5 வியாங்கொடை ரயில் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

படுகாயங்களுடன் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்றுபேர்செவ்வாயன்று மரணமானார்கள்.

அவர்களுடன் இறந்தவர் எண்ணிக்கை 16ஆக அதிகரித்தது.

காயமடைந்தவர்களில் 10 பேர் தமிழர், 23 பேர் சிங்களவர், 4 பேர் முஸ்லிம்கள் ஆவர்.

(உ-எ-2)

## உரும்பராய் இந்துவில் பொருட்காட்சி

உரும்பராய் இந்துக் கல்லூரியின் பவள விழாவின் ஒரு அம்சமான பொருட்காட்சி எதிர்வரும் 9, 10 ஆம் திகதிகளில் நடைபெறஇருக்கின்றது.

விஞ்ஞான, மருத்துவ, கலை, கலாசார நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய இப்பொருட்காட்சி மு. ப. 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இடம் பெறும்.

(உ)



"ரெலிபோன் செய்ய ஏன் எல்லோரும் MCTயையே தேடிப் போகிறார்கள்?"

"இது தெரியாதா? அங்கு போனால் மினைக்கேடில்லை. பாதுகாப்பும் கூட. இரவோ பகலோ நிம்மதியாக ரெலிபோன் செய்யலாம்."

"MCT எங்கே இருக்கு?"

இது தெரியாதா? பெரியாஸ்பத்திரிக்கு கிழக்குப் புறத்தில் பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கையில்."

dynads

பம்பாய் வெங்காய விதை

அரால் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தின் முயற்சியால் இறக்குமதி செய்யப்பட்ட விதை விவசாய அதிகாரிகளால் உத்தரவாதம் செய்யப்பட்டது. விஞ்ஞான முறைப்படி களஞ்சியப்படுத்தப்பட்டது, வெளிவந்த பயிர் திறமையாகவுள்ளது. சிறிய அளவு விதை கையிருப்பிலுள்ளது.

பெறுமிடம்,

ஸ்ரீமகள் ரேடர்ஸ்

158, ஆஸ்பத்திரி வீதி
(பெரிய கடை)
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23572

**உதய சங்கற்பம்**

உள்ளதைச் சொல்ல எங்கே தைரியம் பிறக்கிறதோ அங்கே தான் உரிமையும் பிறக்கிறது.

-சாந்தி அடிகள்


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

இல. 15 2வது ஒழுங்கை, பின்சர் நிலைய வீதி, யாழ்ப்பாணம் 05-06-86 தொலைபேசி 2480 5 22078 த. பெ 28


## இன்று நாள்: ஜூன் 5

இன்று ஜூன் மாதம் ஐந்தாம் திகதி.

இலங்கை அரசியலில்— அரசியல் வரலாற்றில், நாட்டின் சரித்திரத்தில் எல்லாம் முக்கிய இடம் பிடித்த தினம் அது.

ஆனால் தமிழர்களைப் பொறுத்த மட்டில் அது கரி நாள்.

பிரிட்டிஷாரிடம் இருந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் மேலோங்கி நின்ற சிங்களத் தீவிரவாதம், செயலுருவம் பெற்றது— சட்ட அந்தஸ்து பெற்றது அன்றைய தினத்தில் தான்.

தமிழர் வாழ்வில் மீண்டும் அடிமைத்தனம் திணிக்கப்பட்ட நாள் ஜூன் ஐந்தாம் திகதி தான். இலங்கை சிங்களவரும் தமிழரும் வாழும் நாடு எனக் கூறிக் கொண்டு, தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதியன்றுகும்

தமிழர்களின் உரிமைப் போராட்டம், சுதந்திரப் போராட்டம் கருக் கொண்டதும் அதே 1956 ஜூன் ஐந்தில் தான். நாடாளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்படுவதை எதிர்த்து அதே நாள் தந்தை செல்வா தலைமையில் காலிபேஸ் மைதானத்தில் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

தமிழர்கள் தமது உரிமைகளை, சுதந்திரத்தை இரத்தம் சிந்தியே பெற்றாக வேண்டும் என்று நிருபணமானதும் அந்தத் தினத்தில் தான். சத்தியாக்கிரகம் இருந்தவர்களைக் குண்டர்கள் தாக்கினார்கள். அன்றைய இளம் புலிகளான தமிழ் எம்.பிக்கள் இரத்தம் வழிந்தோடிய நிலையில் சிங்களச் சட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் ஆக்ரோஷக் குரல் எழுப்பினார்கள்.

ஏ, தமிழர்களே! உங்களுக்கு என்று உரிமைகள்எதுவுமில்லை. சுதந்திரமும் இல்லை. நாங்கள் பிச்சையாக வழங்கும் சலுகைகளை பெற்றுக்கொண்டு இருக்க வேண்டியது தான். நாங்கள் ஆள்பவர்கள். நீங்கள் அடிமைகள்; ஆளப்படுபவர்கள்.—

உங்களுக்கு உரிமை வேண்டும் என்று அஹிம்சைப் போராட்டம் ஏதாவது நடத்தினால் நீங்கள் இரத்தம் சிந்தவேண்டி வரும் காடைத்தனத்தால், அசுரத்தனத்தால், அரக்கத்தனததால் உங்களை ஒழித்து விடுவோம்.—

இவ்வாறு சிங்கள அரசியல் வாதிகள் தமிழ் மக்களுக்குப் பூடகமாக— மறைமுகமாகத் தெரிவித்தது 1956 ஜூன் ஐந்தில் தான் அதன் பின்னர் அடுத்துத் தொடுத்தும், விட்டு விட்டும் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டன. மொத்தத்தில் தமிழர் வாழ்வு நிலை குலைக்கப்பட்டது.

குறிப்பாகச் சொல்வதானால், இன்றைய தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடித்தான், வேண்டுமானால் தமது உரிமைகளை நிலைநாட்ட முடியும். அன்பால், அஹிம்சையால், சமாதானத்தால் முடியாது என்பதை அன்றே சிங்கள அரசியல் வாதிகள் எடுத்துக் காட்டிவிட்டனர்.

அந்த வழியில், அடக்கு முறைக்கு எதிராகப் போராடிய இளம் சிங்கம் சிவகுமாரன் உயிர் நீத்ததும் ஒரு ஜூன் ஐந்தில்தான். 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி தனது உயிரைத் தியாகம் செய்து சிவகுமாரன் தமிழரின் உரிமைப் போராட்டில் ஒரு புதிய உத்வேகத்தை உருவாக்கினான்.

அதன் பின்னர், குறிப்பாக 1977 இன் பின்னர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வேறு திசைக்கு மாறவேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டது.

இன்று—1986 ஜூன் ஐந்தாம் திகதி தமிழர் உரிமைப் போராட்டம் உச்சகட்டம் அடைந்த நிலைக்கு வந்திருக்கிறது. அரசாங்கத்தின் அடக்கு முறையும் உச்சத்துக்கு வந்து விட்டது

இன்று—

தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரியும், அரச பயங்கரவாதத்தைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று யாழ். நகரில் நடக்கிறது.

அஹிம்சைப் போராட்டங்களைக் கணக்கில் எடுக்கும் பழக்கம் அரசாங்கத்திடம் இல்லை. எனினும் இவ்வாறான பேரணிகள் வெளி உலகத்துக்கு எமது நிலையை எடுத்துச் சொல்லவாவது உதவும்.

இப்போது நடக்கும் அட்டூழியங்களுக்கு மத்தியிலும், அஹிம்சை வழியில் நம்பிக்கை உள்ளவர்களும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள் என்பதையாவது இந்தப் பேரணி அரசுக்கு இடித்துரைப்பதாக அமையட்டும்.

இது போன்ற அஹிம்சைப் போராட்டங்கள், அரச கட்டிலில் உள்ளவர்களை சிறிதளவாவது நியாயத்தை, நீதியை, தர்மத்தைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுவதாகுக.

## புதிய பாடசாலையில் வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஜூன் 5

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்கு புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஆயர் பாடி தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நேற்று முதல் வகுப்புக்கள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டதை அடுத்து ஏராளமான மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு மாறிச் சென்றுள்ளனர்

(உ-10)

# நிக்கராகுவா கலகத் தலைவருக்கு அரசியல் புகலிடம்

## நிபந்தனையுடன் வழங்கியுள்ளது கோஸ்டோறிக்கோ அரசு

மெனாகுவா ஜூன்-4

நிக்கராகுவா சண்டினிஸ்டா அரசுக்கு எதிரான கலகத் தலைவர் ஈடன் பஸ்டோராவுக்கு கோஸ்டாறிக்கோ அரசு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது:

நிக்கராகுவா அரசுக்கு எதிரான தனது போக்கைக் கைவிட்டுள்ளதாக 2 வாரங்களுக்கு முன் பஸ்டோரா அறிவித்திருந்தார்.

அரசியல் அடைக்கலம் கோரி சிறையில் அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பஸ்டோராவின் மனமாற்றத்தைக் கருத்திற்கொண்டே புகலிடம் வழங்குவதாக கோஸ்டோறிக்கோ தெரிவித்துள்ளது.

நிக்கராகுவா அரசுக்கு எதிராக ஏதாவது அரசியல் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டால் நாட்டைவிட்டு உடன் வெளியேற்றப்படுவார்

இந்த எச்சரிக்கையுடனேயே அவருக்கு தாம் புகலிடம் வழங்கியுள்ளதாக அந்த நாடு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

**வெளி உலகில்**

# தமிழ்நாடு துறைமுக தொழிலாளர் வேலைநிறுத்தம் முடிவு

சென்னை, ஜூன் 4

தமிழ்நாடு துறைமுகத் தொழிலாளர்களின் ஒரு பிரிவினர் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தம் முடிவடைந்துவிட்டது.

21 நாட்களாக இந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

பொதிகள் ஏற்றும் இறக்கும் பிரிவில் தொழில் பார்த்த 158 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததற்கு எதிராகவே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தொழிலாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கும் இடையே நடந்த சமரச பேச்சுக்களைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது (ஐ)

## மிசோரத்தில் 24 மணி நேர வேலைநிறுத்தம்

புதுடில்லி ஜூன்-4

பாரதத்தின் மிசோரம் பகுதியில் குழப்பங்களை நிறுத்தி சமாதானம் ஏற்படுத்தவேண்டும் எனக்கோரி 24 மணி நேர வேலைநிறுத்தம் நடைபெற்றது.

பிராந்தியக் கட்சிகள் ஏற்பாடு செய்த இந்த வேலை நிறுத்தத்தில் மாணவர்களும் பங்கெடுத்துக்கொண்டனர். (ஐ)

# ஆணா, பெண்ணா; எது வேண்டும்?

## விருப்பமான குழந்தை பெறலாம் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

ஜப்பானின் வைத்தியத்துறை விஞ்ஞானிகள் கருத்தரிப்பு தொடர்பான ஆய்வில் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

செயற்கைக் கருத்தரிப்பு மூலம் குழந்தைப் பேறு அடையவிரும்புபவர்கள் இனி தாம் விரும்பியபடி ஆண் அல்லது பெண் குழந்தையைப் பெறலாம்.

ஆய்வு மேற்கொண்ட விஞ்ஞானிகளின் கருத்துப்படி இதுவரை தமது கண்டுபிடிப்பு பெண்குழந்தை விடயத்தில் பூரண வெற்றியளித்துள்ளதாகவும் ஆண் குழந்தை விடயத்தில் இன்னும் சிறிது முன்னேற்றம் காணவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (ஐ)

## பாரத- ரஷ்யா வர்த்தகம்

புதுடில்லி, ஜூன்.4

ரஷ்யா பாரதத்தின் சிறந்த வர்த்தகக் கூட்டாளிகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இவ்வாறு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் பாரத சோவியத் வர்த்த தொழிற்கழகத்தைத் துவக்கி வைத்து பிரதமர் உரையாற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

இருநாடுகளும் கூட்டாக இருதரப்பு வர்த்தக தொடர்புகளையும் வலுவடையச்செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ஐ)

# அகதி முகாம்களைச்சுற்றி பெய்ரூட்டில்கடும்சண்டை

## 20பேர்வரை கொல்லப்பட்டனர் ஏராளமான குடிமக்கள் படுகாயம்

பெய்ரூட், ஜூன் 4

லெபனானில் பலஸ்தீன அகதிகள் முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும்சண்டைகள் நடந்து வருகின்றன.

இந்த 6 மாதங்களில் 20 பேர்வரை கொல்லப்பட்டதாகவும் பெரும் தொகையினர் காயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த இருவாரங்களாக அகதிகள் முகாம்களுக்குள் நடைபெற்ற சண்டைகள் இப்பொழுது முகாம்களுக்கு வெளியே முதல்முறையாக நடப்பதாக மேலும் கூறப்படுகிறது.

ஷியா அமால் பிரிவு படைகளுக்கும் ஷண்ணி முஸ்லிம் பிரிவு தீவிர வாதிகளுக்கும் இடையே இந்த மோதல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன

பெய்ரூட் நகரைச்சுற்றியுள்ள இடமெங்கும் பரந்துள்ள இந்தமோதல்கள் தெருத் தெருவாக நடைபெறுவதாகவும் இதனால் சாதாரண குடிமக்கள் — சிவிலியன்கள் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல்களை உடன் நிறுத்தக் கூடிய முறையில் தலையிடுமாறு சிரியாவை ஷண்ணி முஸ்லிம் பிரிவினர் கேட்டுள்ளதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதல்களில் முக்கிய பங்கு வகிக்கும் ஷியா அமால் பிரிவுக்கு சிரியா ஆயுதங்களை வழங்குவதாகவும் அகதிமுகாம்களை நாசப்படுத்தத்திட்டம் வகுத்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கமும் இந்தமோதல்களுக்கு காரணம் எனவும் ஷண்ணிமுஸ்லிம் பிரிவை கருவியாகக் கொண்டு முகாம்களை அரசியல் சக்தியாக மாற்றி ஆதாயம் பெற அது முயற்சிப்பதாகவும் எதிர்க் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஷயா—அமால் பிரிவை சிரியா ஆதரிப்பது ஷண்ணிமுஸ்லிம் பிரிவை பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆதரிப்பதும் வெளிப்படையானது. (ஐ)

# தியாகி கந்தசாமியின் போக்கு 4 தசாப்தங்களுக்கு முன்பே இளைஞருக்கு வழிகாட்டியது

தியாகி கந்தசாமியின் நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

1947 ஆம் ஆண்டு இலங்கை மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு.

பிரித்தானிய அரசிடமிருந்து இலங்கை மக்களுக்கு ஆட்சி உரிமை மாற்றப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது.

பிரித்தானிய ஆட்சியாளர் தம்மீது சுமத்தப்பட்ட நிர்ப்பந்தத்தின் காரணமாக— தங்களுக்கு இலங்கையிலுள்ள பொருளாதார நலன்களுக்குப் பாதிப்பில்லாத வகையில்— மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்தை வழங்க ஏற்பாடுகள் செய்தனர்.

இந்த அரைகுறை சுதந்திரம் மக்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவாது என இடதுசாரி அரசியல் தலைவர்களும் தொழிற் சங்க உறுப்பினர்களும் அப்போது குரல் கொடுத்தனர்.

இந்த அரசியல் பின்னணியில் இலங்கைக்கு பூரண அரசியல் சுதந்திரம் கோரி இடதுசாரிகள் பல போராட்டங்கள் நடத்தினார்கள்.

அவ்வாறான போராட்டங்களின் உச்சகட்டமாக தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தம் அமைந்தது.

இப் போராட்டம் இன, மத வேறு பாடுகளுக்கு அப்பாற்பட்டதாக அமைந்தது.

எல்லா இன, மத மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கக் கூடியவகையில் போராட்டத்தை நடத்திய தலைமை தன் திட்டத்தை அமைத்தது.

அன்று ஆட்சியிலிருந்த ஐ. தே. க. அரசாங்கம் மக்கள் அலைகளுக்கு எதிராக எழுவதைப் புரிந்து கொண்டு அடக்குமுறையை வலுப்படுத்தியது; ஊர்வலங்களுக்குத் தடை விதித்தது.

சுதந்திர வேகம் கொண்ட— அடக்கு



முறையை ஒடுக்க நினைத்த— தொழிலாளர்கள் தடை உத்தரவை மீறினர்.

5-6-47 அன்று நடந்த பொது வேலை நிறுத்தத்தின் ஓர் அங்கமாக தடை உத்தரவை மீறி ஊர்வலம் நடைபெற்றது.

அந்த ஊர்வலம் சென்றடைய வேண்டிய இடத்தை அடையவில்லை ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது. அஹிம்சை முறையில் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்படவில்லை ... பயங்கர வாதத்தால் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஊர்வலத்தில் சென்ற தோழர் வே கந்தசாமி சுட்டுக் கொல்லப்பட்டார். வேறும் பலர் காயமடைந்தனர்.

வேலை நிறுத்தமும் முறியடிக்கப்பட்டது. வேலை நிறுத்தத்திற் பங்கு பற்றிய பல ஊழியர்கள் பழிவாங்கப்பட்டார்கள்.

வேலை நிறுத்தம் முறியடிக்கப்பட்ட பொழுதும் முன் வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கைகள் சிலவற்றை 1956 ஆம் ஆண்டிற்குப் பின் பதவியேற்ற அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது.

தோழர் கந்தசாமியின் அரசியல் நோக்கும் போக்கும் தமிழ் தலைவர்களின் நோக்குக்கு மாறாக இருந்தன.

அவர்கள் கந்தசாமியின் தியாகத்திற்கு உரிய மதிப்புக் கொடுக்கவில்லை. தமிழ் மக்களின் விமோசனத்திற்கு கந்தசாமி சென்ற வழி உதவாது என நம்பினர். அதற்கமைய செயற்பட்டனர்.

ஆனால் அவர்கள் சென்றவழி தமிழ் மக்களுக்கு விமோசனமளிக்கவில்லை.

இந்த நேரத்தில் இளைஞரின் அரசியல் பிரவேசம் அரசியல் சிந்தனையில் புதிய பாதையை நோக்கியதாக அமைந்தது.

அவர்களின் அனுபவ ரீதியிலான சிந்தனையும் செயற்பாடும் இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன் கந்தசாமி நம்பிய, பின்பற்றிய அரசியல் சிந்தனையை நோக்கியதாகஅமைந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கந்தசாமியின் தியாகம் தியாகிகளுக்கு முன் ... உள்ளது எனக் கருதக் கூடியதாகவுள்ளது.

எனவே கந்தசாமிக்குச் செலுத்தும் அஞ்சலி வெறும் சம்பிரதாயமாக அமையாது அர்த்த புஷ்டியானதாக அமைய வேண்டும்.

கந்தசாமி சென்றவழி பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆய்வு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான ஆய்வு தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது முழு உலகிற்கும் பயன்படுபவையாக அமையக் கூடும்.

**சி. இராமச்சந்திரா**



**பொய்யாமொழி**

குறள்:

அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.

பொருள்:

பொறாமைப்பட்டுப் பெருமையுற்றவரும் உலகத்தில் இல்லை; பொறாமை இல்லாதவராய் மேம்பாட்டில் இருந்து நீங்கியவரும் இல்லை.

# புதிய கட்டுப்பாடான போராளிகள் அமைப்பு

## குண்டு வெடிப்புச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்கிறது புரொன்ட்லைன்

குழம்பிய நிலையில் இலங்கைப் பிரச்சினை என்ற தலைப்பில் இந்திய 'புரொன்ட்லைன்' சஞ்சிகையில் மாலினி பார்த்தசாரதி கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். அக்கட்டுரை தமிழாக்கம்செய்யப்பட்டு இன்று பிரசுரமாகின்றது.

பேச்சுக்கள் நடத்துவதுஇலங்கைஅரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதி. மற்றப்பகுதி இராணுவ ரீதியான நடவடிக்கை.

இந்தஅடக்குமுறை தந்திரத்துக்கு தேவையான ஆயுத உதவிகளை இஸ்ரவேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடமிருந்து இலங்கை பெறுகிறது.

தமிழர் தரப்பில் போராளிகளின் ஒரு சாரார் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இராணுவ ரீதியில்தான் பதிலளிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

தொடர்ச்சியாக கொழும்பில்நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள், வடபகுதியில் இரண்டு அமைப்புக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் தற்போதைய சூழ்நிலையில் குழப்பநிலையைத்தான் தோற்றுவித்து உள்ளன

நிலைமையில் சரி, பிழையை ஊகிப்பதில் குழப்பம் உள்ளது மட்டும் அல்ல, அரசியல் நடைமுறையில் குரோதத்தின் புதிய அம்சங்களையும் புகுத்தி உள்ளது.

அனுராதபுரம் பெற்றோலியக் குண்டுவெடிப்பு மத்திய தந்திக் கந்தோர் குண்டு வெடிப்பு முதலிய சம்பவங்கள் அரசியல் தீர்வுக்கு எதிரானவர்களுக்கு நல்ல வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து உள்ளன.

இராணுவ ரீதியான நடவடிக்கையில் அதிகம் ஈடுபட வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் நிர்ப்பந்தமும் நெருக்குதலும் அரசாங்கத்துக்கு உண்டு. இதனால் தீவின் அரசியல் நிலை குழம்பிக்கிடக்கின்றது.

'தீவிரவாதத்துக்கு எதிரான யுத்தம்' இலங்கையின் பொருளாதாரத்தையும் ஜெயவர்த்தனவின் செயலையும் வெகுவாகப் பாதித்துள்ளது தெரிகின்றது

இந்தியாவின் உதவியுடன் பேச்சுக்கள் மூலம் அரசியல் வழியில் தீர்வு காணவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் தெளிவான அம்சமும் தெரிகின்றது.

வன்செயல்களில் ஈடுபடுவோருடனும் அதற்கு அனுதாபம்காட்டுவோர்களுடன் பேச்சுக்களை நடத்துவதில் அர்த்தம் இல்லை இப்படி குண்டு வெடிப்புச் சம்பவங்களை ஆதாரம் காட்டி சிங்களத் தீவிர வாத சக்திகள் கூறும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளது

புதிய கட்டுப்பாடான போராளி அமைப்பு ஒன்று உருவானதைக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் காட்டுகின்றன. இதனால் தமிழர் விடு

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# உதயன்

05 06 1986 வியாழக்கிழமை



வைபவங்கள் இனிக்க
'அணிக்' ஐஸ்கிறீம்
பரிமாறுங்கள்
வசதியான °0 ml பிளாஸ்ரிக் 'கப்' களில்
ரூ 3 50 மட்டுமே
மொத்த விலைக்கழிவுகளும் உண்டு
Also available:
FAMILY BLOCKS, GALLONS
dyn ads marketing
476, Main Street, CHUNDIKULI
(Opposite St John's College)


மூன்றரை வருடங்களுள்

# குடாநாட்டில் காணமல் போனோர் பட்டியல் தயாரிப்பு

## செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்5 1983 தொடக்கம் 1986 மே மாதம்வரை யாழ் குடாநாட்டில் காணமற் போனவர்களின் பட்டியலைத் தயாரிப்பதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணம் கிளை முடிவுசெய்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுமுகமாகவே காணமற்போனவர்களின் பட்டியலைத் தயாரிக்க சங்கக் கிளையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

இது சம்பந்தமாகக் காணமற்போனவர்களின் விவரங்களை அனுப்பி வைக்கும்படி அவர்களின் உறவினர்களுக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது

காணமற் போனவரின் பெயர், விலாசம், பால், வயது, திருமணமானவரா, திருமணமாகாதவரா, குடும்பவிவரங்கள், காணமற்போன இடம், திகதி முதலிய விவரங்களுடன் ஜூன் 25ஆம் திகதிக்கு முன்னர் திரு. வ. பரமசிவம், இணைச் செயலாளர், யாழ் செஞ்சிலுவைச் சங்கம், மே ,, பா. வை. எம் சி. ஏ யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது சிலகாலம் இயங்காமல் இருந்த யாழ் செஞ்சிலுவைச் சங்கக் கிளை, மே 17 ஆம் திகதி தொடக்கம் புனரமைக்கப்பட்டு இயங்குகின்றது.

கிளையின் தலைவராக சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். (உ-எ)

## மின்சாரக் கட்டணம் செலுத்தாமல் தப்பிய அரசியல்வாதி மனைவி

கொழும்பு, ஜூன் 5 ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவரின் மனைவி கட்டவேண்டிய மின்சாரபில் பற்றிய சுவையான செய்தி ஒன்றை கம்யூனிஸ்ட் நாளிதழான 'அத்த' நேற்று வெளியிட்டது.

கொழும்புக்கு வெளியே அந்த அரசியல்வாதியின் மனைவி நிர்வகித்து வரும் அச்சகம் ஒன்று இருக்கிறதாம். அதன் பேரில் 30 ஆயிரம் ரூபா அளவில் மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. பணத்தைக் கட்டச் சொல்லி சிவப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டது பணம் கட்டப்படவில்லை.

மின் தொடர்பை வெட்ட உத்தியோகத்தர்கள் சென்றனர். உடனே அந்த அரசியல்வாதியின் மனைவி, மாவட்டத்துக்குப் பொறுப்பான அரசியல்வாதிக்கு அறிவித்தார். மின் தொடர்பை வெட்ட வேண்டாம் என்று உத்தியோகத்தருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இப்படி 'அத்த' செய்தி கூறியது. (உ-எ-2)

## ஒன்றுபட்ட தமிழர்

(1 ம் பக்கத் தொடர்ச்சி) கசியமாகவே இந்திய அதிகாரிகளினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கடிதத்தில் வெளியிடப்பட்டுள்ள திரு. ஜெயவர்த்தனவின் கருத்து பற்றி இந்திய அரசு என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளது என்பது தீர்மானிக்கப்படும் வரை, கடிதம் பகிரங்கமாக வெளியிடப்படமாட்டாது.

இப்படி புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் பின்வருமாறு எழுதி இருக்கிறார்:

இராணுவத் தீர்வு காணுவதற்கு பாகிஸ்தான், இஸ்ரவேல் வழங்கும் உதவிகள் இலங்கைக்குப் போதாமல் உள்ளன.

இலங்கை எதிர்பார்க்கும் உதவிகள் மேற்கு நாடுகளிடமிருந்தும் கிடைப்பதாக இல்லை.

இந்த நிலையில் தான் திரு. ஜெயவர்த்தன இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் நல்லாதரவைத் தொடர்ந்து பெற விருப்பம் தெரிவித்து இருக்கிறார்.''

இப்படி திரு. ரெட்டி எழுதியுள்ளார். (உ-எ-2)

## புதிய கட்டுப்பாடான---

(3 ம் பக்கத் தொடர்ச்சி) தலைக் கூட்டணியுடன் பேச்சுக்கள் நடத்துவது அர்த்தம் நிறைந்ததாக இருக்கமாட்டாது.

பேச்சுக்கள்மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்பதற்கு எதிரான சக்திகள் மேற்கண்டவாறு கூறி பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறும் மிதவாதிகளைக் கண்டிக்கின்றன.

அண்மைக் காலத்தில் இந்தியாவின் பங்கும் கடும் கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களை இந்தியா விரைந்து கண்டித்தது. இதனைவைத்து குறிப்பாக எதிர்க்கட்சியில் உள்ள சிங்கள அரசியல்வாதிகள் தற்போதைய அரசியல் நிலையை அனுமதிப்பதாக இல்லை.

தனது மண்ணில் இருந்து இயங்குவதற்கு தீவிரவாதிகளை அனுமதிப்பதால் இவ் வன்செயல்கள் இடம்பெறுகின்றன என்பதை இந்தியா இனியாவது உணரும் என்று நம்புகிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கூறுகிறார்.

தற்போதைய குழறுபடி நிலை காரணமாக கவலை, யுத்தத்தில் ஈடுபாடு ஆகியவற்றுக்கு இடையில் திரு. ஜெயவர்த்தன ஊசலாடுவது போல் தெரிகிறது.

சிதம்பரம்குழுகொழும்பில் பேச்சுக்கள் நடத்திய சமயம் இலங்கை அரசோ இராணுவ பலத்தை அதிகரிப்பதில் தான் நாட்டம் காட்டியது அமைச்சர் லலித் அத்துலத் முதலியோ பேச்சுக்களின் இடைநடுவில் இஸ்ரவேலுக்கு சென்று திரும்பினார் என்றும் நம்பப்படுகிறது.

(தொடரும்)

## தமிழ் சிறுமியும் சிங்களவரும் கைது

### குண்டுப் புரளி கிளப்பியவர்களாம்

கொழும்பு, ஜூன் 5 குண்டுப் புரளியை உருவாக்குபவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து தமிழ்ச் சிறுமி ஒருத்தியையும் ஒரு சிங்களவரையும் பொலீஸார் நேற்றுக் கைது செய்தனர்.

அந்தத் தமிழ்ச் சிறுமியின் பெயர் பிரமிளா அற்புதராசா, வயது 13. சொந்த ஊர் மானிப்பாய். கொள்ளுப்பிட்டியில் ரொய்ட் பிளேஸில் உள்ள வீடு ஒன்றில் வசித்து வருகிறார். வீட்டுக்காரர் ஒரு சிங்களவர்

குண்டுப் பார்சல்கள் பற்றி அனாமதேயத் தொலைபேசித் தகவல்கள் கொழும்பு நகரை கலக்கி வருகின்றன அல்லவா!

இப்படிப் பொய்த் தகவல்களைப் பரப்புபவர்களைக் கண்டுபிடிக்க அதிகாரிகள் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே இந்த இரண்டு பேரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

(உ-எ-2)

## கூட்டணி அறிக்கை

சென்னை, ஜூன் 4 தமிழர்மீதான கொடுமை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இந்தியா இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் தமிழர்மீதான அடக்குமுறை குறைந்திருப்பதாக இலங்கை அரசு காட்டிக் கொள்ள நினைத்தால் அதை நம்ப எவரும் தயாராக இல்லை.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி சென்னையில் விடுத்த அறிக்கையில் கூறியுள்ளது. (உ-எ2)

## தொல்லை தரும் தொலைபேசி

யாழ்ப்பாணம், ஜூன் 5 யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொலைபேசிகள் கடந்த சில நாட்களாக ''தொல்லைபேசி''களாக மாறி வருகின்றன.

கடந்த இரண்டு வாரத்திற்கு மேலாக யாழ் தொலைத் தொடர்புத் திணைக்களத்திற்கு ஊழியர்கள் சமுகமளித்து கடமையாற்ற முடியாததே இந்தச் சீர்கேட்டுக்குக் காரணமாகும்.

பொலீஸ் உத்தியோகஸ்தர் விடுதியில் இராணுவம் தங்கி இருப்பதாலும், கோட்டை முகாமில் இருந்து அடிக்கடி 'ஷெல்' தாக்குதல் நடப்பதாலும் தொலைபேசித் திணைக்கள ஊழியர்கள் ஒழுங்காகக் கடமைக்குச் செல்ல முடியாதுள்ளது

பெரும்பாலான தொலைபேசிகளில் வெளியிலிருந்து அழைப்புகள் வருகின்றன. ஆனால் அவற்றிலிருந்து 'டயல்'' செய்து பேசமுடியாத நிலைஇருந்து வருகிறது.

(இ-10)

## காணமல் போன இளைஞர் எங்கே?

### இராணுவ அதிகாரிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 5 சிதம்பரி ராஜலிங்கம் என்ற இளைஞர் காணமற்போனதாகக் கூறப்படுவது குறித்து யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர், வயாவிளான் ஆயுதப்படை முகாம் பொறுப்பதிகாரிக்கு அறிவித்திருக்கின்றார்.

சுழிபுரம் வாசியான 26 வயது இளைஞர் சிதம்பரி ராஜலிங்கம் மே 19 முதல் காணமற்போய் விட்டதாக மயிலிட்டி, பலாலி, ஊறணி பிரசைகள் குழு எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

அச்சுவேலியில் உள்ள சகோதரனைப் பார்ப்பதற்காக சைக்கிள் ஒன்றில் வயாவிளான் ஊடாக சென்று கொண்டு இருந்த சமயமே இராஜலிங்கம் காணமற் போய்விட்டதாக பிரசைகள் குழு அறிவித்துள்ளது.

சந்தர்ப்பவசமாக பலாலி ஆயுதப்படை முகாமில் இராஜலிங்கம் தடுத்து வைக்கப்பட்டு இருந்தால், அவரைச் சந்திக்க திருமதி பரிமளத்தை அனுமதிக்கும்படி கோருகின்றேன்.

இப்படி மேலதிக அரசஅதிபர், வயாவிளான் பொறுப்பதிகாரிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(உ—எ)

## செய்தியாளர் சேஷ்டையா?

கொழும்பு, ஜூன் 5 குண்டுப் புரளியை ஏற்படுத்துவதற்காக பார்சல் ஒன்றை மருதானை சென் யோசப் கல்லூரிக்கு அருகில் வைத்ததாகக் கூறப்படும் இரண்டு நபர்களை மக்கள் பிடித்து பொலீஸிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் இருவரும் எதிர்க்கட்சிப் பத்திரிகை ஒன்றின் செய்தியாளர்கள் என்று அரசாங்க வட்டாரங்கள் குற்றம் சாட்டின. (உ-எ-2)

## திருமலை

(1 ம் பக்கத் தொடர்ச்சி) டைச்சந்தியில் வைத்து பஸ் மற்றும் வாகனங்களில் வந்த தமிழ்ப்பயணிகள் தாக்கப்பட்டனராம்.

சில தமிழ்ப் பயணிகள் வெட்டுக்காயங்கள், சூட்டுக்காயங்களுக்கும் இலக்காகினர் என்று கூறப்படுகின்றது.

ஆண்டான்குளத்தில் நடைபெற்ற சம்பவத்தில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் காயம்அடைந்தவர்கள் பற்றிய விவரங்களும் —

பின்னர் 4ஆம் கட்டைச் சந்தியில் நடந்ததாகக்கூறப்படும்தாக்குதலில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றிய விவரங்களும் இச்செய்தி எழுதும்வரை கிடைக்கவில்லை

ஆண்டான்குளச் சம்பவத்தில் காயமடைந்ததாகக் கூறப்படும் இரண்டு பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

திருமலை வீதிகளில் இராணுவரோந்து அதிகரிக்கப்பட்டிருந்தது மக்கள் மத்தியில் பயம்,பீதி, பதற்றம் நிலவியது

(உ-எ-150)

## போராளிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி) மக்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அல்லது காயம் அடைந்தனர். ஷெல் தாக்குதலினால் பல வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

தாக்குதல் சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்த சமயம் கிளிநொச்சிப் பகுதியில் மோதிக் கொண்டிருந்த பாதுகாப்புப் படையினருக்கு அவசர உதவி வழங்குவதற்காக ஆனையிறவிலிருந்து படைகள் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும் ஆனையிறவிலிருந்துபடையினரை கிளிநொச்சி நோக்கி முன்னேற விடாது போராளிகள் வழிகளில் பல மதகுகள், பாலங்களைக் குண்டு வைத்துத் தகர்த்திருந்ததால் ஆனையிறவிலிருந்து புறப்பட்ட படைகள் இடைவழியில் திரும்பியதாக அறிய வருகிறது.

கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு முன்னால் உள்ள கண்டிவீதியில் பெரிய குழி ஒன்று ஏற்பட்டிருந்ததாகவும் —

கிளிநொச்சிக் குளம் உடைக்கப்பட்டதனால் அப்பகுதி தண்ணீரில் மூழ்கியதாகவும் கூறப்படுகிறது.

ஆனையிறவிலிருந்து இராணுவம் முன்னேறிய சமயம் வீதிக்குக்குறுக்கே சில வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாம். அவற்றில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

கிளிநொச்சி மோதலில் ஏற்பட்ட குண்டுவெடிச் சத்தங்கள் மாங்குளம், நெடுங்கேணி வரையிலும் கேட்டதாகவும் செய்திகள் வந்தன.

### அரசாங்கம் அறிவிப்பு

இதனிடையில் கிளிநொச்சியில் மோதல் இடம்பெற்று வருவதாக அமைச்சர்ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ், அமைச்சரவைக் கூட்ட முடிவில் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்

பாதுகாப்பு வட்டாரங்களின்படி ஆறு தீவிரவாதிகள் இறந்ததாகக் கூறப்பட்டது. தமது தரப்பில் இழப்பு ஏற்படவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

(அ-உ-எ-1-10)

## நகரசபை உறுப்பினர்களும் துப்பாக்கி கேட்கிறார்கள்

கொழும்பு, ஜூன் 5 தீவிரவாதிகளிடம்இருந்து பாதுகாத்துக் கொள்ள நகரசபை உறுப்பினர்களுக்கும் துப்பாக்கிகள் வழங்குங்கள்.

இப்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று பாணந்துறை நகரசபைக் கூட்டத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

சுதந்திரக் கட்சி உறுப்பினர் இப்பிரேரணையைக் கொண்டுவந்தார்.

சகல உறுப்பினர்களும் இப்பிரேரணையை ஆதரித்தனர்.

தற்போதைய நாட்டின்நிலை பயங்கரமாக உள்ளது. ஆகவே நகரசபை உறுப்பினர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவர்களுக்கு அரசு துப்பாக்கிகளை வழங்க வேண்டும்—

இப்படி அந்தப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ-2)

## உண்ணாவிரதம்; கைவிடச் செய்ய முயற்சி

கொழும்பு, ஜூன் 5 வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை சுமுகமாகத் தீர்த்து வைப்பது குறித்து முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிங்களக்கைதி ஹென்றி பெரேராவுக்கு அரசியல் கைதி அந்தஸ்து வழங்க வேண்டும் எனவும்—

அவரைத் தமிழ்க் கைதிகளுடன் வைத்திருக்க வேண்டும் எனவும் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது

ஹென்றி பெரேரா மூலமே உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடச் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. (உ)

## லொறி கடத்தப்பட்டது

மட்டக்களப்பு, ஜூன்5 அம்பாறை இ போ.ச. வேலைத் தலத்துக்குச் சொந்தமான பஸ் உதிரிப்பாகங்கள், லொறியுடன் செவ்வாய் மாலை கடத்தப்பட்டன.

தாளங்குடா என்னுமிடத்தில் லொறி சென்று கொண்டிருந்த சமயம் கடத்தப்பட்டது.

லொறியின் சாரதி, கிளீனர் ஆகியோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அன்றைய தினம் காத்தான்குடியில் இருந்து கொழும்பு சென்ற தனியார் பஸ் தேக்கஞ்சோலை என்னுமிடத்தில் வழிமறிக்கப்பட்டு கொள்ளை இடப்பட்டது. சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பொருள்கள் கொள்ளை இடப்பட்டன

(உ-எ-2)

## வயாவிளான்---

ஏற்பட்டது.

இவரும் தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பகல் 12.30 மணிக்கு இரண்டாவது தடவையாகவும் பிற்பகல் 3.00 மணிக்கு மூன்றாவது தடவையாகவும் ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொண்டது

ஹெலிக்கொப்டரின் 8.30 மணித் தாக்குதலுக்கு முன்பு வயாவிளான் முகாமில் இருந்து சிப்பாய்கள் பலாலி முகாமுக்கும், பலாலியில் இருந்து வயாவிளானுக்குமாக இடம் மாறியதாக அறியப்படுகின்றது

வயாவிளான் முகாமின் பின் பக்க வழியாலும், முன்பக்க பலாலி யாழ். வீதி வழியாகவும் சிப்பாய்கள் காலை 8.00 மணிக்கு கண்டபடி சரமாரியாகச் சுட்டுக் கொண்டே புறப்பட்டதாகவும் இடைக்கிடை 'சென்றி' நின்றபோராளிகள் துப்பாக்கியால் எதிர்த் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்தே கிழக்குப் பக்கத்தில் இருந்து வந்த ஹெலிக்கொப்டர் சுடத்தொடங்கியது.

ஒட்டகப்புலம், செல்வநாயகபுரம், செல்வபுரம், வயாவிளான், புன்னாலைக் கட்டுவன், திடற்புலம், குட்டியப்புலம் மக்கள் இதனால் பீதி அடைந்துள்ளனர். (இ-119

## யாழ் அரச

(1ம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

அரசாங்க அதிபருடன் செயலகத்தைச் சேர்ந்த மற்றும் மூன்று உயர் அதிகாரிகளும் பயணம் தடைபட்டு வவுனியாவில் தரித்துள்ளனர்.

இவர்களைப்போல் கொழும்பிலிருந்தும் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் இருந்தும் யாழ் நோக்கி வந்த நூற்றுக்கணக்கானோர் வவுனியாவில் தரித்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

## செல்வநாயகபுரம் தமிழரின் மரணங்கள் கொலைகள் எனத் தீர்ப்பு

திருகோணமலை, ஜூன் 5 திருகோணமலை, செல்வநாயகபுரத்தில் இறந்த பத்துத் தமிழர்களின் மரணங்களும் கொலைகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது

திருகோணமலை நீதிவான் திரு. சுனில் ராஜபக்ஷ நேற்று மரணவிசாரணைகளை நடத்தினார்.

சம்பவத்தை நேரிற் கண்டதாகக் கூறப்படும் சாட்சிகள் எவரும் மரண விசாரணையில் சாட்சியமளிக்கவில்லை.

இறந்தவர்களின் உறவினர்கள் மட்டுமே சாட்சியம் அளித்தனர்.

(உ-எ-150)

## தீ அணைப்பு

யாழ்ப்பாணம், ஜூன்5 வீடு ஒன்று தீப்பிடித்த போது யாழ் - மாநகர சபையின் தீயணைக்கும் படையினர் உடனடியாக செயல்பட்டு தீயை அணைத்தனர்.

இச்சம்பவம் நேற்று இரண்டு மணி அளவில் யாழ் - ஐயனார்கோவிலடியில் உள்ள வீடு ஒன்றில் நடந்தது (இ-10)

## மிரிஹானவில் மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 5 மிரிஹான என்னும் இடத்தில் நேற்று மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் மூவரை பொலீஸார் கைது செய்தனர்.

அரசுக்கு எதிரான சுவரொட்டிகள் வைத்து இருந்ததற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வாரம் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 9 பேரை பொலீஸார் கைது செய்திருந்தனர். இவர்களில் 8 பேர் பட்டதாரி மாணவர். ஒருவர் பிக்கு.

(உ-எ-2)

## வாகனங்கள் பணியுடன் திரும்பின

யாழ்ப்பாணம், ஜூன்5 நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றபஸ்கள், லொறிகள்அனைத்தும் பணி,இயக்கச்சியுடன் திருப்பி அனுப்பப்பட்டன.

நேற்றுக் காலை கிளிநொச்சியில் நடைபெற்ற போராளிகள்-சிப்பாய்கள் மோதலை அடுத்தே இந்த வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

இதனால் கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு செல்லவிருந்த சகல பஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களும் யாழ்நகர் திரும்பி வந்தன.

(இ-10)

## தமிழர் மாணவரை வெளியேற்ற கோரிக்கை

கொழும்பு, ஜூன் 5 மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் இருந்து தமிழ் மாணவரை வெளியேற்றுமாறு கோரி சுவரொட்டிகள் அப்பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன

சிங்கள மாணவர்களே இச்சுவரொட்டிகளை ஒட்டினர் என்று கூறப்படுகின்றது. (உ-எ-2)

## ஆபிரிக்க நாடுகளுக்கு நிதி உதவி

நியூயோர்க் ஜூன், 4 ஆபிரிக்க நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பின் நிதி உதவிக் கோரிக்கையை ஐ. நா. சபைவிசேட கூட்டத்தில் நாடுகள் பல ஏற்றுக்கொண்டுள்ளன.

பட்டினிபோக்கும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் பிற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பெருந்தொகை நிதி உதவியை அந்த அமைப்பு கோரி இருந்தது.

கோரப்படும் இந்த உதவியின் கணிசமான தொகையை பொருளாதார வலுவுள்ள நாடுகள் அளிக்க முன்வந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பங்களாதேஷ் வேலைநிறுத்தம் தொடர்கிறது

டாக்கா ஜூன்-4 பங்களாதேஷ் மருத்துவர்கள் கழக வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்தவார இறுதி வரை வேலை நிறுத்தம் தொடர்ந்து நடத்தப்படும் என கழகம் தெரிவித்துள்ளது.

( ஐ )

## நகரில்:..

(1ம் பக்கத் தொடர்ச்சி) யாழ் நகரின் பிரதான வீதிகள் வழியாக யாழ் செயலகத்தைஅடையும்.

பேரணியில் பொது மக்களையும் பாடசாலை மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு தேசிய மாணவர் மன்றமும் மாணவர், இளைஞர் பொது மன்றமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதன் மூலம் அரசுக்கும் சர்வதேச உலகுக்கும் மீண்டும் ஒருமுறைமாணவர்கள் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்த வேண்டுமெனவும் இம்மன்றங்கள் கேட்டுள்ளன. (இ-10)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 16 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 5-06-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 16 Second Lane, Power House Road, Jaffna. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org